# மீலாத் விழா காணொளி போட்டி

# (VIDEO COMPETITION)

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

### 1. அறிமுகம்

ஏல்லாம் வல்ல அல்லாஹ் காலத்துக் காலம் அவனது தூதர்களை இவ்வுலகுக்கு நல்வழி காட்டும் பொருட்டு அனுப்பி வைத்துள்ளான். அவனது தூதர்களில் அவன் இறுதியாக அனுப்பி வைத்த அண்ணல் நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் நேர்மையான, நீதியான, கருணையுள்ள, அன்பான, உண்மையுள்ள, வீரம் மிக்க மனிதர் என்பதற்கு பொருத்தமான உதாரணமாகத் திகழ்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினம் ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இதனுடைய தேசிய முக்கியத்துவம் கருதி இலங்கையில் இத்தினம் பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு முஸ்லிம் சமய கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல்வேறு வகையான தேசிய போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் பெருமிதம் கொள்கிறது. இதன் ஓர் அங்கமாக இவ்வருடம் எமது திணைக்களம் **‘‘அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இப் பிரபஞ்சதிற்கு ஓர் அருட்கொடையாவார்கள்”** எனும் கருப்பொருளில் ஒரு காணொளி போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது.

### 2. கருப்பொருள்

**‘‘அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இப் பிரபஞ்சதிற்கு ஓர் அருட்கொடையாவார்கள்”**

### 3. போட்டியின் குறிக்கோள்கள்

- அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆன்மிக வாழ்வு - சமூக வாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

- அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மானிடர்கள், மிருகங்கள், தாவரங்கள் போன்ற அனைத்து ஜீவராசிகளையும் உள்ளடக்கிய இப் பிரபஞ்சத்திற்கே அருட்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பற்றிய ஓர் ஈர்ப்பினை குறிப்பாக இளையோர் மத்தியில் ஏற்படுத்தல்.
- காணொளி படப்பிடிப்பாளர்களை சமூகமட்டத்தில் உருவாக்குவதுடன் அவர்கள் அத் தொழில்துறையில் மிளிரும் வகையில் களமமைத்துக் கொடுத்தல்.
- காணொளி படப்பிடிப்புத்துறையில் ஈடுபடும் தொழில்சார் படப்பிடிப்பிளார்களை இனங்காணுதலும் அவர்களை ஊக்குவித்தலும்.

## 4. போட்டி நிபந்தனைகள்

- இலங்கையரான எவரும் இந்த காணொளி போட்டியில் கலந்து கொள்ளலாம். எனினும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்கள், அதிகாரிகள், அவர்களது மனைவி-கணவன், பெற்றோர், சகோதர சகோதரியர், பிள்ளைகள் எவரும் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- தனி நபர்களினாலும் கலாசார குழுக்களாலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். (கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது வேறு வியாபார நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)
- பங்குபற்றுவோர் 13 வயதோ அல்லது அதற்கு மேற்பட்டவராகவோ இருத்தல் வேண்டும்.
- திணைக்களத்தின் விதிமுறைகளை எவ்வித நிபந்தனைகளுமின்றி, முற்று முழுதாக ஏற்றுக்கொள்வதோடு. ஏதாவதொரு விதிமுறையை அல்லது நிபந்தனையை மீறுவது தகுதியின்மையாக கருதப்படும்.

## 5. காணொளி – வரைவிலக்கணம்

காணொளி கிளிப் என்பது புத்தாக்கத்துடனான குறும்படமாக இருத்தல் வேண்டும். மேலும் ஒலிச் சேர்க்கை, இசை போன்றவற்றை இணைத்தும் காணொளிகளினை தயாரிக்க முடியும். எவ்வாறாயினும் வெறுமனே எழுத்து, உரை, உரையாடல், குரல் பதிவு போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

### 5.1. காணொளிப் படைப்பாக்கத்திற்குரிய பொதுவான தேவைப்பாடுகள்

- அனைத்து காணொளிகளும் தரப்பட்ட கருப்பொருளுக்கு அமைவாக இருக்க வேண்டும். கருப்பொருளுக்கு பொருத்தமற்ற காணொளிகள் தானாகவே போட்டியிலிருந்து நீக்கப்படும்.
- காணொளிப் படைப்புக்களினை ஆங்கிலத்திலோ அல்லது சிங்களத்திலோ அல்லது தமிழிலோ சமர்ப்பிக்க முடியும்.
- சமர்ப்பிக்கப்படும் காணொளிகள் யாவையும் சமர்ப்பிப்பவரின் சொந்த படைப்பாக மாத்திரமே இருத்தல் வேண்டும். வேறொருவரின் படைப்பையோ, அல்லது புலமைச்சொத்தையோ அவர்களது எழுத்து மூல அனுமதியின்றி இணைக்கக் கூடாது.
- போட்டியில் இணைந்து கொள்ளும் காணொளிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருத்தல் கூடாது:

    1. இனவெறி, பாலியல் அல்லது பிறரை புண்படுத்தும் குறிப்புக்கள்.
    2. மதநிந்தனைகள், போதைப் பொருள் பாவனை சட்டத்திற்கு புறம்பான செயல்களை ஊக்குவித்தல் தொடர்பான உள்ளடக்கங்கள்.
    3. வெறுப்புப் பேச்சு, வன்முறை, அவதூறு ஏற்படுத்தல் அல்லது செயல்முறை குற்றங்கள்.

- பிறர் கருப்பொருளை திருடுதல் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். அது காணொளி தகுதியற்றது என தீர்மானிப்பதற்கும் காரணமாக அமையும்.
- காணொளியானது இதற்கு முன்னர் வேறு போட்டிகளுக்கோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ வெளியிடப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

### 5.2 காணொளிப் படைப்பாக்கத்திற்குரிய தொழில்நுட்ப தேவைப்பாடுகள்

- ஒரு காணொளி 3 நிமிடங்களிலிருந்து 5 நிமிடங்களுக்குள் அமைதல் வேண்டும். அதன் குறைந்த தரம் 720p (resolution) ஆக இருக்க வேண்டும்.
- 3 நிமிடங்களுக்கு குறைந்த காணொளிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- காணொளி நாடாவின் அளவானது வேகமாக பதிவேற்றிக் கொள்ளும் பொருட்டு 300 MB ஆக அல்லது அதற்கு குறைவாக இருக்க வேண்டும்.
- காணொளி நாடா முறையாக நிரப்பப்பட்ட கூகுள் படிவத்துடன் (Google Form) அனுப்ப வேண்டும்

### 6. போட்டியில் இணைந்து கொள்ள

- போட்டியில் இணைந்து கொள்ள, தயவுசெய்து இணையவழி போட்டிப் படிவத்தை (Google Form) பூரணப்படுத்த வேண்டும்

- இணைய வழி படிவத்தை சமர்ப்பிக்க, தயவுசெய்து பின்வரும் இணையவழியினை (Link) கிளிக் செய்யவும்.

https://forms.gle/oAEJVNhssuoGp2a79

- எல்லா விண்ணப்பங்களிலும் போட்டியாளரின் பெயர், வயது, கைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பன கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்

## 7. போட்டிக்கான காலம்

| செயற்பாடுகள். | காலம் மற்றும் நேரம் |
|---|---|
| **போட்டி அறிவிப்பு** | 20 ஆகஸ்ட் 2021 வெள்ளி மு.ப.12.00 மணி |
| **சமர்ப்பிக்கப்படவேண்டிய இறுதி தினம்** | 20 செப்டம்பர் 2021 திங்கள் பி.ப. 11.59 மணி |
| **பரிசீலனை குழு தீர்ப்பு** | 05 ஒக்டோபர், 2021 செவ்வாய் மு.ப. 10.00 மணி |
| **வெற்றியாளர் அறிவிப்பு** | 10 ஒக்டோபர் 2021 ஞாயிறு பி.ப. 4.00 மணி |

## 8. வெற்றியாளர்கள் தெரிவுக்கான நிபந்தனைகள்

கிடைக்கப் பெறுகின்ற அனைத்து காணொளிகளும் முஸ்லிம் சமய கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள தேர்வுக்குழுவினால் திரையிடப்பட்டு பரிசீலனை செய்யப்படும். தகுதியான காணொளிகள் மட்டுமே திணைக்களத்தின் முகநூல் பக்கத்தில் (facebook page) பதிவு செய்யப்படும். முகநூல் பாவனையாளர்களின் விருப்புக்கள் (Likes), கருத்துக்கள் (comments), மற்றும் பகிர்வுகள் (shares) போன்றவற்றுக்காக இவ்வாறு செய்யப்படும்.

பின்வரும் தேர்வு அளவுகோள்களுக்கு அமைய திணைக்களத்தின் தேர்வுக்குழு முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் மேலும் ஏழு (07) கௌரவ வெற்றியாளர்களையும் தெரிவு செய்யும்.

| இல. | அளவுகோல். | புள்ளி |
|---|---|---|
| 1 | பொருத்தப்பாடு | 25 |
| 2 | படைப்பாற்றல் மற்றும் அசல் தன்மை | 25 |
| 3 | தயாரிப்புத் தரம் மற்றும் தொழிநுட்பத்திறன் | 25 |
| 4 | பொதுமக்கள் ஈடுபாடு (Likes, Comments, Shares) | 25 |

**குறிப்பு:** கிடைக்கப்பெற்ற எந்தக் காணொளியும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொள்ள தகுதியற்றவையாக காணப்படுகின்ற போது ஏழு (07) காணொளிகள் கௌரவ பரிசுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும்.

## 9. வெற்றியாளர்களினை அறிவிப்பு செய்தல்

வெற்றிப் பெற்ற காணொளிகள் எங்கள் இணைய தளத்திலும் மற்றும் முகநூலிலும் பதிவேற்றம் செய்யப்படும். வெற்றியாளர்களுக்கு அவர்களின் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கைப்பேசி மூலமாகவோ தெரிவு செய்யப்பட்ட அதே தினம் அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவித்தல் விடுக்கப்படும் போது அது கிடைக்கப்பெறாதவிடத்து அல்லது வெற்றியாளர் அடையாளம் காணப்படாதவிடத்து அல்லது வெற்றியாளர் பரிசினைப் பெற்றுக் கொள்ள முன்வராத பட்சத்தில் அப்பரிசானது திணைக்களத்தின் முடிவின் படி இறுதிச் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட வேறொருவருக்கு வழங்கப்படும்.

## 10. உரிமம்

முஸ்லிம் சமய கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் காணொளிகள் அனைத்தையும் இணையத்தில், முகநூலில், மற்றைய சமூக வலைத்தளங்களில் மின்னியல் நிகழ்ச்சிகளில் பதிவிடும் முழு உரிமை திணைக்களத்திற்கு இருக்கின்ற அதேவேளை, ஏனைய காணொளி தொடர்பான ஏகபோக உரிமம் போட்டியாளருக்கு உரியதாகவே காணப்படும்.

## 11. பரிசுகள்

போட்டி முடிவில் கூடிய மக்கள் ஈர்ப்பினை ஏற்படுத்தும் வகையிலான அதிக விருப்புக்கள், அதிக நேர்க்கருத்துக்கள் மற்றும் அதிக பகிர்வுகளுடன் கூடிய ஏனைய அனைத்து அளவுகோல்களையும் நிறைவு செய்யும் காணொளிகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் மற்றும் ஏழு கௌரவப் பரிசுகளையும் பெற்றுக்கொள்ளும். குறிப்பிட்ட பரிசு விபரங்கள் திணைக்களத்தின் தனிப்பட்ட முழுமையான தீர்மானத்தின்படி அமையும் அதேவேளை, பின்வரும் வகையில் பரிசுகளினை வழங்க திணைக்களம் தீர்மானித்துள்ளது:

- முதலாம் பரிசு - ரூ.100,000/-
- இரண்டாம் பரிசு. - ரூ.50,000/-
- மூன்றாம் பரிசு. - ரூ.25,000/-
- கௌரவப் பரிசுகள. (07) - ரூ.10,000/- தலா ஒவ்வொன்றும்

## 12. ஏனைய விதிமுறைகளும் நிபந்தனைகளும்

- முஸ்லிம் சமய கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தனது தற்துணிவின்படி பொருத்தமற்றதாக அல்லது பூரணமற்றதாகக் கருதப்படும் காணொளிகளை நீக்கலாம், அழிக்கலாம் அல்லது பறிமுதல் செய்யலாம்.
- இக் காணொளிகளை திணைக்களம் எவ்வாறான காரணங்களுக்காகவும் பயன்படுத்தும் முழு உரிமை பெற்றுள்ளது.
- அனைத்து வெற்றியாளர்களும் அனைத்து உத்தியோகபூர்வ நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார்களா என எவ்வித வரையறையுமின்றி ஆய்வு செய்யப்படுவார்கள்.
- இன, வயது, பால், மத வேறுபாடு, பாலியல் நிலை, அரசியல் பின்னணி, தொழில் தகுதி அல்லது பாகுபாடு ஏற்படுத்தும் வேறு காரணிகள் போன்றவற்றை கருத்தில் கொள்ளாது வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
- காணாமல் போகும், தாமதமாக வரும், கணினி குறைபாடு காரணமாக பூரணமற்றதாக வரும் படைப்புகள், தொழில்நுட்ப கோளாறுடன் வரும் படைப்புகள் போன்றவற்றிற்கு எவ்வித பொறுப்பினையும் திணைக்களமோ அல்லது திணைக்கள ஊழியர்களோ பொறுப்பாகமாட்டார்கள்.
- முஸ்லிம் சமய கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு இப்போட்டியினை இடைநிறுத்தவும், இரத்து செய்யவும் அதேவேளை முடிவு திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றியாளர்களை தெரிவு செய்யும் உரிமையும் அதிகாரமும் உண்டு.
- இம் மீலாத் விழா காணொளிப் போட்டியில் கலந்து கொள்ளும் பொருட்டு, நீங்கள் முகநூல் காணொளி ஒன்றினை சமர்ப்பிக்கின்றவிடத்து மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் உங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே கருதப்படும்.
- இந்நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் இப்போட்டியில் பங்கு கொள்ளவோ அல்லது உங்கள் காணொளியை பதிவேற்றம் செய்யவோ வேண்டாம் என தயவுடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.
- இம் மீலாத் விழா காணொளி போட்டி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான ஆங்கில மற்றும் தமிழ் வெளியீடுகளுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுமாயின் ஆங்கில வெளியீடே இறுதியானதாகக் கொள்ளப்படும்.

**எம்.எல்.எம். அன்வர் அலி,**

**பணிப்பாளர் (பதில்)**

**முஸ்லிம் சமய கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**